**செ.வெ.எண்: 51** **நாள்: 17.02.2017**

# <u>பத்திரிகைச்செய்தி</u>

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நமது மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்வி விடுதிகளில் தங்கி பயிலும் 10, 12 மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நல அலுவலகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளது. அதனடிப்படையில் முதற்கட்டமாக வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி வகுப்புகள் 18.02.2017 அன்று காலை 10 மணிக்கு புதுக்கோட்டை அருள்மிகு பிரகதாம்பாள் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், அன்றைய தினம் மதியம் 2.00 மணியளவில் அறந்தாங்கி அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெறவுள்ளது. எனவே விடுதி மாணவ, மாணவிகள் வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி வகுப்பில் பங்குபெற்று பயன் பெற வேண்டும்.

மேற்காணும் தகவலை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.செ.சிதம்பரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**